செ.வெ.எண்.16 நாள்: 09.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொரானா வைரஸ் நோய் தொற்று தமிழ்நாட்டில் தீவிரமாகாமல் தடுக்க தமிழக அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. ஏப்ரல் 14-ஆம் தேதி வரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு பல நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்களின் நன்மை கருதி போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு எடுத்துவருகிறது. மாநிலம் முழுவதும் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, மாவட்ட எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.

எனினும் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசிய தேவைகளுக்கான பொருட்களின் உற்பத்தி மற்றும் நகர்வுகள் தடையின்றி நடைபெறவும், கால்நடை, கோழி, மீன், முட்டை, இறைச்சி, கால்நடை மற்றும் கோழித்தீவனம், கால்நடை தீவன உற்பத்திக்கான மூலப்பொருட்கள் ஆகியவற்றின் நகர்வுகளுக்கும் விலக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் காணொலி மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உணவின்றி சிரமப்படும் நாயினங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியவற்றிற்கு உணவு அளிக்கவும், உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை தேவைப்படும் ஆதரவற்ற கால்நடைகள் மற்றும் பிராணிகள் நலன் பேணுதல் குறித்த தகவல்களை உடனுக்குடன் கவனிக்க, இதற்கென பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபெசி எண்.1800-425-5880 (ம) 1962 ஆகியவை மூலமாகவும், anh.tn@nic.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் இது குறித்த தகவல்களை பொதுமக்கள் தெரிவிக்கலாம்.

மேலும் மாவட்ட அளவிலேயே அந்தந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநரின் கைபேசி எண்.9445001115, உதவி இயக்குநர் தொடர்பு எண், 9443594934 தொடர்பு கொண்டு உடனுக்குடன் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**